# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
## பொது அறிவிப்பு

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்,புது தில்லி, 14.09.2006 அன்று வெளியிட்ட சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை எண்.எஸ்.ஓ. 1533–ன்படி பொது மக்கள் கருத்து கேட்புரையானது சொல்லப்பட்ட அறிவிக்கையின் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட தொழிற்திட்டங்கள் அனைத்திற்கும் பின்இணைப்பு 4–ன்படி பாதிப்புக்குள்ளாகும் உள்ளூர் மக்களின் எண்ணங்களை கேட்டறிவதற்காக, அவசியமானதாகச் செய்யப்பட்டுள்ளபடியால்,

14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின்படி, மேற்படி அறிவிக்கையின் பத்தி 7 (III) துணை பத்தி (iii) மற்றும் பின் இணைப்பு 4–ன்படி பொதுமக்கள் கருத்து கேட்புரையானது, மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்படுதல் வேண்டும் என்கிறபடியால்,

14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின்படி, மேற்படி அறிவிக்கையின் பத்தி 7 பின் இணைப்பு 4–ன்படி மாவட்ட குற்றவியல் நீதிபதி அல்லது அவரது பிரதிநிதியாக கூடுதல் மாவட்ட குற்றவியல் நீதிபதி பதவிக்கு குறையாத தகுதியுடையவர் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பிரதிநிதியின் உதவியுடன் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை மேற்பார்வையிட்டு நடத்தி தரப்படுதல் வேண்டும் என்கிறபடியால்,

14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையில் வேண்டுறுத்தப்பட்டுள்ளபடியால் பின்வரும் தொழில் திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம், கீழ்க்குறிப்பிட்ட தேதியன்றும், நேரத்திலும் மற்றும் இடத்திலும் பாதிப்புக்குள்ளாகும் உள்ளூர் மக்களின் எண்ணங்களை கண்டறிவதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| தொழிற்திட்டத்தின் பெயர் | அமைவிடம் | தேதி | நேரம் | நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|---|---|
| தி/ள். கிங்ஸ் இண்டியா கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்., எரி சாராய அலகு | வடசேரி கிராமம் ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 9.04.2010 | மாலை 03.00 மணி | திட்ட அமைவிடம் வடசேரி ஒரத்தநாடு வட்டம் தஞ்சாவூர் மாவட்டம். |

இதன் தொடர்பாக தொழிற்திட்டத்தின் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை அதன் செயல்முறை திட்ட சுருக்கம் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)

பின்வரும் இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காகவும், ஆய்வுக்காகவும் வகை செய்யப்பட்டுள்ளது என்று இங்கு இதனால் தெரிவிக்கப்படுகிறது.

1. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், பரியாவரன் பவன், சிஜிஓ காம்ப்ளக்ஸ், லோதி ரோடு, புதுதில்லி – 110 003.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.
3. மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், தஞ்சாவூர்.
4. மாவட்ட தொழில் மையம், தஞ்சாவூர்.
5. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், வட்டார அலுவலகம் (தெற்கு மண்டலம்), கேந்திரியசாதன், 4வது மாடி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை விங்க், 17வது பிரதான சாலை, இரண்டாவது ப்ளாக், கொரமங்கலா, பெங்களூர் – 560 034.
6. உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், எண்.3 4வது தெரு, ஸ்ரீராம் நகர், ரெட்டிப்பாளையம் ரோடு, தஞ்சாவூர் – 613004.
7. தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 76, மௌண்ட் சாலை, கிண்டி, சென்னை – 600 032.
8. அரசு செயலர் அலுவலகம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
9. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.

தொழிற்திட்டத்தின் பொறுப்பாளர், பொதுமக்கள் கேட்புணர்வு கூட்டத்தை துவக்கிவைத்து சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் செயலாண்மை திட்டத்தின் செயல் விளக்க சுருக்கம் மற்றும் விளக்கப்படத்துடன் விரிவாக விவரிப்பார்.

பொதுமக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெற வாய்ப்பளிக்கப்படும் வகையில் தொழிற்திட்டத்தினரால் ஆவண செய்யப்படும். பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவிக்கும் ஒவ்வொருவருடைய கருத்துக்களும் பிரதிபலிக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டு கூட்ட முடிவில் கூட்ட செயல்முறை ஆணைகள் விளக்கப்பட்டு மறுநடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும். மற்றும் கேட்புணர்வு கூட்ட செயல்முறை ஆணைகள் பொதுமக்களின் பார்வைக்காக கீழ்காணும் அலுவலகங்களில் வைக்கப்படும்.

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
2. மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், தஞ்சாவூர்.
3. உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், எண்.3 4வது தெரு, ஸ்ரீராம் நகர், ரெட்டிப்பாளையம் ரோடு, தஞ்சாவூர் – 613004

4. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.
5. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணைய தளமான www.tnpcb.gov.in

கேட்புணர்வு கூட்ட நடவடிக்கை ஆணையின் மீது கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவைகளை நேரடியாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், பரியாவரன் பவன் ,சிஜிஓ காம்ப்ளக்ஸ், லோதி ரோடு, புதுதில்லி – 110 003 மற்றும் தலைவர், திரு/ள். கிங்ஸ் இண்டியா கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிட்., புதிய எண்.272, அவ்வை சண்முகம் சாலை, 2 – வது தளம், கோபாலபுரம், சென்னை – 600 086 ஆகிய இடங்களுக்கு அனுப்பலாம்.

உத்தேசித்துள்ள திட்டத்தின் சுற்றுச்சூழல் கண்ணோட்டத்தின் மீதான குறிப்பிடத்தகுந்த வாய்ப்பினை பெற்றிருக்கும் மற்ற சம்மந்தப்பட்டவர்கள் அவர்களது கருத்துக்கள், நோக்கங்களை எழுத்து மூலமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் (அல்லது) மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புதுதில்லிக்கு அனுப்பிட வேண்டப்படுகிறது.

உறுப்பினர் செயலாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
சென்னை.

# எரிசாராய தயாரிப்பு தொழிற்சாலை
# திட்டத்தின் செயலாக்கத் தொகுப்பு

கிங்ஸ் இந்தியா கெமிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்,
வடசேரி கிராமம், ஒரத்தநாடு தாலுகா,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு மாநிலம்,

## செயலாக்க விரிவுரை :-

சென்னையை சார்ந்த கிங்ஸ் இந்தியா கெமிக்கல்ஸ் கார்ப்பரேன் லிமிடெட்,எரிசாராயம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை, வடசேரி கிராமம், ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு மாநிலம், தஞ்சாவூர்- திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைக்க திட்டமிட்டு உள்ளது. இந்நிறுவனமானது மாதத்திற்கு 36 லட்சம் லிட்டர் எரிசாராயம் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையின் மொத்தப் பரப்பளவு 20.8 ஏக்கர் ஆகும். இந்நிறுவனத்தின் உள்கட்டமைப்பு வசதி 4.8 ஏக்கர் நிலப்பரப்பில் அமையஉள்ளது. மீதமுள்ள 16 ஏக்கர் நிலப்பரப்பானது சுற்றுச் சூழல் சீரமைப்பு பணிக்காகவும், பசுமை திட்டப்பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## நிறுவன சுற்றுச் சூழல் அமைப்பு :-

இத்தொழிற்சாலையானது வடசேரி கிராமம், ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டத்தில் அமையஉள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 3396.57 சதுர.கி.மீ. 2001 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 22,05,375. இதில் 10,91,557 ஆண்களும், 11,13,818 பெண்களும் அடங்கியுள்ளனர்.

தஞ்சை மாவட்ட மக்களின் முக்கிய தொழில் விவசாயம். அதில் முக்கிய பயிர்களாக நெல், கரும்பு, மற்றும் தென்னை சாகுபடி அடங்கும்.

இந்த திட்டப் பணிக்கு இவ்விடத்தை தேர்வு செய்ய மிக முக்கியமான காரணம் எளிதாக கிடைக்ககூடிய மூலப்பொருள்களான ( மோலாஸஸ் / டேப்பியோக்கா மாவு) போன்றவை மிக அருகாமையில் கிடைக்கின்றன.

மேலும், இந்த பகுதியின் நிலப்பரப்பு சமதளமாக உள்ளது. இந்த பகுதியில் நிலத்தடி நீர் அதிக அளவில் உள்ளது. இவ்விடத்தின் நிலப்பரப்பில் அதிக அளவில் கரிசல் மண் சூழப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு அருகாமையில் இயற்கை எழில் மிகுந்த காடுகளோ பறவை சரணாலங்களோ, சுற்றுலா மையங்களோ, ஏதும் இல்லை. மேலும் குடியிறுப்பு பகுதிகளை அகற்றும் நிலை இங்கு இல்லை.

FLOW SHEET OF MOLASESS BASED DiSTILLATION PROCESS FOR 120 KLPD TOTAL SPIRIT



## சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் அளவுகள் :-

முக்கிய செயல் திட்டங்கள் ஆனது கட்டுமானப் பணிகளின் அடிப்படையிலும் செயலாக்க அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## காற்று :-

கட்டுமான பணிகளின் போது வாயு மாசுக்களான கொதிகலன்களில் SPM/RPM போன்றவை சற்று அதிக அளவில் வெளியேறினாலும் அவை தற்காலிகமாகத்தான் உமிழப்படுகின்றன. ஆகவே இந்த பணிகளின் போது வெளிப்படும் வாயு மாசுக்கள் காற்று மண்டலத்தை மாசுபடுத்தும் அளவில் இருப்பதில்லை. மின்சாரத் தேவைகளுக்காக, கட்டுமானப் பணிகளின் போது மின் தடை ஏற்பட்டால் டீசல் ஜெனரேட்டர்கள் பயன்படுத்தப்படும். இதிலிருந்து வெளியேறும் புகையில் உள்ள மாசுக்களின் அளவு வாயு மண்டலத்தில் மிகக் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தகூடும். மேலும் இப்பகுதியில் மின் தடையில்லாமல் கிடைப்பதால் ஜெனரேட்டர்கள் அரிதாக பயன்படுத்தப்படும். எனவே இந்த தொழிற்சாலையை நிறுவும் போது நடக்கும் கட்டுமான பணிகளின் காரணமாக வாயு மண்டலத்தில் எவ்வித மாசும் ஏற்ப்படாது.

எரிசாராயம் உற்பத்தி செய்யும் போது தொழிற்சாலையிலிருந்து இன்சினிரேட்டர் (Incinerator Boiler) எனப்படும் நீராவிக் கொதிகலனிலிருந்து மாசு படிந்த புகை வெளியேறும். இதனை பேக் ஃபில்டர் எனப்படும் மாசு தடுக்கும் பையினுள் செலுத்தி சிறிய துகள்களை (SPM/RPM) தேக்கி, தடுத்து மாசற்ற புகையினை புகைபோக்கி வழியாக வாயு மண்டலத்தில் வெளியேற்றப்படும். ஆகவே தொழிற்சாலை புகையினால் வாயுமண்டலத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை.

## ஒலி மாசு :-

கட்டுமான பணிகளின் ஏற்படும் ஒலி அளவுகளை குறைக்க மின்சாரத்தால் இயங்கக்கூடிய இயந்திரங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற்சாலை இயக்கத்தின் போது ஒலி மாசுக்கான மிக முக்கிய காரணங்களில் ஜெனரேட்டர்கள் மற்றும் மின்சாரத்தால் இயங்கக்கூடிய இயந்திரங்கள் ஆகியவை உண்டு. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தொழிலாளர்களின் பயன்பாட்டிற்காகவும் சுற்றுச் சூழல் பயன்பாட்டிற்காகவும், அதிர்வுகளை குறைக்கும் கருவிகளும், ஒலியினை குறைக்கும் கூடுகளும் அமைக்கப்பட உள்ளன. ஆகவே ஒலி அளவானது, மாசு கட்டுப்பாடு வாரியம் தெரிவித்துள்ள அளவைகளுக்கு மிகாமல் இருப்பது சாத்தியமாகிறது.

## நீர் சூழ்நிலை :-

இந்த நிறுவனமானது தற்போதைய திட்டத்தின் படி, மூன்று ஆழ்துளை கிணறுகளை நிறுவி நாளொன்றிற்கு 15 லட்சம் லிட்டர் தண்ணீரை பெற திட்டமிட்டுள்ளது. இந்த ஆழ்துளை கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரானது, இந்நிறுவனத்தின் நீர் பயன்பாட்டிற்கு தேவையானதை பூர்த்தி செய்ய உள்ளது. நிலத்தடி நீர் அதிக அளவில் உள்ளதால் தமிழ்நாடு நிலத்தடி நீர் வாரியமும், இசைவானையை தந்துள்ளது.

## கழிவு மேலாண்மை :-

இந்நிறுவனத்தின் திடக் கழிவு பொருள்களான, பிளாஸ்டிக் பொருட்களும், நீர் சுத்திகரிப்பு கழனிலிருந்து வரும் பொருள்களும், இன்சினிரேட்டர் கொதிகலனிலிருந்து வரும் திடக் கழிவு பொருள்களும் சேகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரும் திடக்கழிவை இன்சினிரேட்டர் சாம்பலில் கலந்து விவசாயத்திற்கு உரமாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திடக்கழிவு மேலாண்மை சரியான அளவில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

## சுற்றுச் சூழல் பாதுகாப்பு மேற்பார்வை திட்டங்கள் :-

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மேற்பார்வை பற்றிய திட்டத்தில் அனைத்தும், காற்று, நீர், நிலம் மற்றும் இதர மாசு கட்டுபாடுகள் பற்றிய உண்மை நிலவரங்களை தகுதியுள்ள நிழிணர்கள் மூலம் கண்டறிந்தும் பதிவு செய்தும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பணிகளை மேம்படுத்தி மாசுக்களை தடுக்கும் வண்ணம் திட்டங்கள் அமைக்கப்படும்.

## திட்டத்தின் பயன்பாடுகள் :-

இந்த தொழிற்சாலை அமைப்பது மூலமாக நேரிடையாகவும், மறைமுகமாகவும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் வண்ணமாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மக்களின் அடிப்படை தேவைகளும் பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சி மேம்படும் சூழல் உருவாக்கப்படும்.

## சுற்றுச் சூழல் மேலாண்மை :-

## காற்று மாசு :-

இந்த தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் ஜெனரேட்டர் மற்றும் நீராவி கொதிகலனிலிருந்து மாசு படிந்த வாயு வெளியாக உள்ளது. இந்த வகையான புகை வாயு மண்டலத்தை மாசுபடுத்தக்கூடியது. இதில் SPM, SOx, மற்றும் NOx போன்ற மாசுக்கள் உள்ளன.

## டீசல் ஜெனரேட்டரிலிருந்து வரும் மாசுக்கள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் :-

இந்த நிறுவனத்திற்கு தேவையான மின்சாரத்தை அரசு மின்சார வாரியத்திடமிருந்து பெருகின்றது. மின்சாரம் துண்டிக்கப்படும் போது இந்நிறுவனம் மூன்று 550KVA ஜெனரேட்டர்களை பயன்படுத்த உள்ளது. இந்த ஜெனரேட்டரிலிருந்து வெளிப்படும் புகையானது மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் (CPCB) நிர்ணயத்துள்ள அளவுகளுக்கு உட்பட்டு இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

## இன்சினிரேட்டர் பாய்லர் (நீராவி கொதிகலன்):-

இந்நிறுவனம் தற்சமயம் 100 டன் நீராவி கொதிகலனை உபயோகிக்க உள்ளது. இந்த கொதிகலன் மூலம் ஒருமணிக்கு 47 டன்கள் நீராவி உற்பத்தி செய்யப்படஉள்ளது. இதற்காக நாளொன்றுக்கு 100 டன் நிலக்கரியும் மற்றும் எரிசாராய உற்பத்தியின் போது உருவாகும் 354 டன் திடக்கழிவும் எரிபொருளாக பயன்படுத்தபடும். இதன் மூலம் எரிகலனிலிருந்த மணி ஒன்றுக்கு 84350m3 மாசுபடிந்த வாயு வெளியேறும் என மதிப்பிடப்படுகிறது. அவ்வாறு வெளிவரும் புகையின் தண்மை கீழ் வருமாறு வகைபடுத்தப்பட்டுள்ளன.

இந்த மாசு படிந்த புகையினை பேக் ஃபில்டர் எனப்படும் மாசு தடுக்கும் கருவியினுள் செலுத்தி மாசுத்துளிகள் (SPM/RPM) தடுத்து தேக்கி தூய்மையான புகையினை புகை போக்கி வழியாக வாயு மண்டலத்தினுள் செலுத்த திட்டமிடபட்டுள்ளது.

| Sl.No | Source of Air Pollution | Emission Quantity | Concentration | | |
|---|---|---|---|---|---|
| | | | Appx Characteristics | | Air Pollution Control Measures |
| 1. | Incinerator Boiler | 84350 M/ hr | SO2 | 400mg/Nm3 | RCC stack of 1500 mm Dia X 80 m height |
| | | | NOx | 117mg/Nm3 | |
| | | | SPM | 120mg/Nm3 | |
| 2. | 550 KVA D.G Sets (2 Nos) | 8760 M/h (each DG set) | So2 | 797mg/Nm3 | 350 mm Dia X 10.0 m height MS Stack |
| | | | Nox | 177mg/Nm3 | |
| | | | SPM | Nil | |

## நீர் மாசுபடுதலும் கட்டுப்படுத்தும் விதிமுறைகளும்:-

## நீர் மேலாண்மை :

இந்நிறுவனமானது நீரை சாராய வினைகலன் மற்றும் நீராவி கொதிகலன் போன்ற உபயோகத்திற்காக பயன்படுத்த உள்ளது.

இத் தொழிற்சாலை நாளொன்றிற்கு 1708m3 முதல் 1813m3 வரை நீரை எரிசாராயம் உற்பத்தி செய்வதற்காக உபயோகப்படுத்த உள்ளது.

## கழிவு நீர் அளவு :-

இந்நிறுவனத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை அதன் கரைசல் தன்மைக்கு ஏற்றவாறு அதிக கரைசல் தன்மை பொருந்திய கழிவுநீர், குறைவான கரைசல் தன்மை பொருந்திய கழிவுநீர் என பிரித்து சுத்திகரிப்பு செய்திட திட்டமிட்டுள்ளது. இத் தொழிற்சாலையிலிருந்து நாளொன்றிற்கு 1257m3 முதல் 2088m3 வரை கழிவு நீர் வெளியேறும் என கண்க்கிடப்பட்டுள்ளது.

## கழிவுநீர் சுத்திகரிப்பு முறை:-

இந்நிறுவனத்திலிருந்து வெளியாகும் கழிவுநீரை அதன் கரைசல் தன்மைக்கு ஏற்றவாறு அதிக கரைசல் தன்மை பொருந்திய கழிவுநீர், குறைவான கரைசல் தன்மை பொருந்திய கழிவுநீர் என இருவகையாக பிரித்து தனித்தனி சுத்திகரிப்பு முறைகளில் சுத்திகரிப்பு செய்ய திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணய அளவுகளை செயல்படுத்த இயலும்.

## அதிக கரைசல் தன்மை பொருந்திய கழிவுநீர் சுத்திகரிப்பு முறை:-

அதிக கரிசல் தன்மை பொருந்திய கழிவுநீரானது இரண்டு கழிவுநீரை, ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ் (Reverse Osmosis) கழிவு நீரோடு கலந்து நடுநிலைபடுத்தப்பட்டு Multiple Effect Evaporator எனப்படும் மூன்றடுக்கு நீராவி கலனில் செலுத்தப்படும். இக் கலனில் கழிவு நீரில் உள்ள திடக்கழிவுகள் தனியாகவும், தண்ணீர் தனியாகவும் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு உண்டான தண்ணீரை மறு சுழற்ச்சிக்காக ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ் (Reverse Osmosis) என்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் செலுத்தி குடி நீராக மாற்றி எரிசாராய வினை கலன்களில் பயன்படுத்தப்படுகிறது.

## தூய நீர் பெறும் வழிமுறைகள் :-

மூன்றடுக்கு நீராவி கலனிலிருந்து நாளொன்றிற்கு 957கிலோ லிட்டர் அளவுள்ள நீரானது 338கிலோ லிட்டர் வினைகலன் நீரோடு கலக்கப்பட்டு R.O.Plant வழியாக சுத்திகரிக்கப்பட்டு நாளொன்றிற்கு 1165கிலோ லிட்டர் அளவுள்ள சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறப்படுகிறது. இந்த நீரானது மறு சுழற்ச்சிக்காக கூலிங் டவரில் (Cooling Tower) பயன்படுத்தப்பட உள்ளது.

| S.No | Parameters | Concentration | |
|---|---|---|---|
| | | Treated Water | TNPCB Standards |
| 1 | pH | 7.0to 7.5 | 5.5to 9.0 |
| 2. | Suspended Solids | <10mg/l | <100mg/l |
| 3 | Total Dissolved solids | 400to 600mg/l | <2100 mg/l |
| 4 | Chemical Oxygen Demand | 150 mg/l | <20 mg/l |
| 5 | Bio Chemical Oxygen Demand | 15 mg/l | <20 mg/l |
| 6 | Oil & Grease | Nil | <10 mg/l |
| 7 | Colour | Colourless | Colourless |
| 8` | Odour | Odourless | Odourless |

## மனிதக் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைகள் :-

நாளொன்றிற்கு 9000 லிட்டர், அளவுள்ள கழிவுநீர், கழிவறை மற்றும் குளியலறை, உணவுக்கூடத்திலிருந்து வெளியேற்றப்படும் இந்த கழிவு நீர் குறைந்தளவு இரசாயன செரிவுடனும், நெடியுடைய மணத்துடன் வெளியேற்றப்படுகிறது. இந்த நீரானது எலக்டிராலிஸிஸ் Electrolysis முறையின் மூலமாக மாசுக்கள் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு கிடைக்கும் நீரானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள மாசு கட்டுப்பாட்டு அளவிற்கு உட்பட்டு இருப்பதினால் பசுமை வள மேம்பாட்டு விதிகளுக்கினங்க பயன்படுத்தப்படுகிறது.

| S.No | Concentration | | | | |
|---|---|---|---|---|---|
| | Parameter | Condensate Water From Evaporator | Spent Less Water From Process | Combined Water for R.O. | Product Water from R.O |
| 1 | pH | 7.0-7.2 | 7.0-7.5 | 7.0-7.5 | 7.0-7.2 |
| 2 | Colour | Colourless | Colourless | Colourless | Colourless |
| 3 | TDS | <20 mg/l | <1500 mg/l | <1000mg/l | <150mg/l |
| 4 | TSS | <10Mg/l | <10Mg/l | <10Mg/l | Nil |
| 5 | COD | <150 Mg/l | <150 Mg/l | <150 Mg/l | <150 Mg/l |
| 6 | BOD3 27 c | <20 mg/l | <20 mg /l | <20 mg/l | <10 mg/l |
| 7 | Oil& Grease | Nil | Nil | Nil | Nil |
| 8 | Flow Rate | 957 m3/d | 338m3/d | 1295m3/d | 1165m3/d |

## திடக் கழிவு மேலாண்மை :-

நீராவி கொதி கலன்களிலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவுகளின் தன்மைகள் கீழ்கண்டவாறு அட்டவணைபடுத்தப்பட்டுள்ளன.

இந்த சாம்பல் விவசாய நிலத்தினில் உரமாக பயன்படுத்தகூடிய வகையில் அமைவதால் இதனை அருகில் உள்ள விவசாயிகளுக்கு மாற்று உரம் மற்றும் கூட்டு உரமாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| Sl.No | Source of Solid Waste Generation | Quantity | Characteristics | Method of Handling Storage | Treatment Disposal Method |
|---|---|---|---|---|---|
| 1. | Incinerator Boiler Residue | 5TPD to 100 TPD | Calcium – 15.83% ( as Cao) Phosphours – 39.54% (as $P_2O_5$) Potassium – 28.47% (as $K_2O$) Chlorides – 16.15% | Mechanised Conveyor / Stored in open yard | Sold to vendors as cheap fertilizer |
| 2. | Sewage Treatment Plant | 6 kg/d | Aluminium ( As hydroxide)- <6% Organics – 74% Moisture – 20% | Mixed with incinerator Boiler ash | |

## ஒலி மாசு கட்டுப்பாட்டு முறைகள் :-

## ஒலி மாசுபடுதலை கட்டுப்படுத்தும் காரணிகள்:

தொழிற்சாலைகளின் ஒலி உட்கவரக்கூடிய பொருள்களை பொருத்துவதன் மூலம் சீரான ஒலி அளவுகளை பெறலாம். இதன் மூலம் அதிக அளவிளான ஒலி மாசுபடுதலை தவிர்க்கப்படுகிறது.

தொழிற்சாலைகளை சுற்றிலும் மரக்கன்றுகளை நடுவதாலும் ஒலிமாசுபடுதல் தவிர்க்கப்படுகிறது.

## பசுமை வளம் மேம்படுத்துதல்:-

இந்த தொழிற்சாலையின் மொத்த பரப்பளவில் 16 ஏக்கர் நிலமானது மரங்களை வளர்ப்பதற்கும் பசுமை மேம்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட நீரானது பசுமை மேலாண்மைக்கு பயன்படுத்தப்படுகிறது.

உயரமாக வளரும் மரங்களையும் மூலிகை செடிகளை நடுவதன் மூலம் நிலச்சரிவுகளையும், நிலம் மாசுபடுதலையும் ஒலி மாசுபடுதலையும் தடுக்க இயலும்.

நிறுவனத்தின் செயலமைப்பு குழு தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் சுற்றுச் சூழல் பசுமை வள மேம்பாட்டு மையம் ஒன்றை தன்னகத்தே உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

ஆகவே அமைய உள்ள கிங்ஸ் இந்தியா கெமிக்கல்ஸ் கார்ப்பரேன் லிமிடெட், என்ற எரிசாராய தொழிற்சாலை மூலமாக சுற்றுச் சூழல் பாதிக்கும் என்ற ஐயம் விஞ்ஞான ரீதியாக களையப்பட்டுள்ளது.